# சாதாரணக் கூட்டம்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியின் சாதாரணக்கூட்டம் **13.05.2021** வியாழக்கிழமை பிற்பகல் **3.30** மணியளவில் நடைபெற உள்ளது. அது சமயம் கீழ்கண்ட கூட்டப்பொருள்கள் நிறைவேற்ற வேண்டி உள்ளதால் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி
நாள். **07.05.2021**

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்.

**பொருள் எண்: 01**

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் பிப்ரவரி – **2021**, மார்ச்–**2021**, ஏப்ரல் –**2021** மாதங்கள் வரையிலான நிகழ்ந்த பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பதிவு செய்தது தனி அலுவலர் பார்வைக்கு வைத்தல்

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| பிப்ரவரி –2021 | 7 | 3 | 10 | 15 | 7 | 22 | – | – | – |
| மார்ச் –2021 | 3 | 6 | 9 | 8 | 8 | 16 | – | – | – |
| ஏப்ரல் –2021 | 1 | 1 | 2 | 13 | 9 | 22 | – | – | – |

**பொருள் எண். 02**

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் பிப்ரவரி – **2021**, மார்ச்–**2021**, ஏப்ரல் –**2021** மாதங்கள் மாத வரவுகள் தனி அலுவலர் பார்வைக்கு வைத்தல்.

| வ. எண் | வரி இனங்கள் விவரம் | பிப்ரவரி– 2021 | மார்ச்–2021 | ஏப்ரல் –2021 |
|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி நிலுவை வசூல் | 114809 | 309027 | 22266 |
| 2 | சொத்து வரி நடப்பு வசூல் | 634979 | 717528 | 227408 |
| 3 | நூலக வரி நிலுவை வசூல் | 10446 | 30916 | 2224 |
| 4 | நூலக வரி நடப்பு வசூல் | 38084 | 72294 | 24262 |
| 5 | தொழில் வரி வசூல் | 1678120 | 297820 | - |
| 6 | குடிநீர் கட்டணம் நிலுவை வசூல் | 240270 | 432930 | 24120 |
| 7 | குடிநீர் கட்டணம் நடப்பு வசூல் | 642380 | 737620 | 25500 |
| 8 | பல வகை பட்ட கட்டணம் நிலுவை வசூல் | **1358147** | 10000 | **0** |
| 9 | பல வகை பட்ட கட்டணம் நடப்பு வசூல் | **2214018** | 18950 | **0** |
| 10 | இதர வரவினங்கள் | **1305942** | 341478 | **1200** |

**பொருள் எண். 03**

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் பிப்ரவரி–**2021** மாத செலவினங்கள் செலவு சீட்டு எண். **1173** முதல் **1278** வரை, மார்ச்–**2021** மாத செலவினங்கள் செலவு சீட்டு எண். **1279** முதல் **1403** மற்றும் ஏப்ரல்–**2021** மாத செலவினங்கள் செலவு சீட்டு எண். **1** முதல் **111** வரை தனி அலுவலர் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

**<u>பொருள் எண். 04</u>**

சோளிங்கர் பேரூராட்சியில் IUDM **2019–20** திட்டத்தின் கீழ் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கி பணிகள் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பேரூந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த மிதிவண்டி நிறுத்தம் கட்டிடம் அமைந்துள்ள பகுதியை தவிர மற்றும் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் தவிர மற்ற இடங்களில் சிமெண்ட் கான்கிரிட் தளம் அமைக்க வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக கண்காணிப்பு பொறியாளர், தர்மபுரி மற்றும் பேரூராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர் **02.10.2021–ல்** ஆய்வின் போது மேற்படி மிதி வண்டி கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் பேரூந்துகள் நிறுத்த ஏதுவாக உள்ளதாகவும் பேரூந்துகள் உள்ளே வந்து செல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் அப்பகுதியில் சிமெண்ட் சாலை தளம் அமைக்க தெவிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் ஆய்வின் போது சிமெண்ட் தளம் அமைக்கும் வடிவமைப்பில் (Design) 1:4:8 Levelling Course கான்கீரிட் இல்லை என்பதால் கான்கீரிட் பணியை மேற்கொண்டு M30 Grade கான்கீரிட் அமைக்க அறிவுரை வழங்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளும் அவசியதால் பேரூந்து நிலைய பணியை முழுமையாக முடிக்க பேரூந்து நிலையத்தின் முன் பகுதியில் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைக்க பேரூராட்சிகளின் உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களால் நேரடி பார்வையிட்டு கூடுதல் பணி மேற்கொள்ள ரூ.**19.51** இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி பொது மக்களின் அத்தியவசியப்பணி என கருதுவதால் மதிப்பீடு தொகைக்கு பேரூராட்சியின் பொது நிதியில் இருந்து பணி மேற்கொள்ள தனி அலுவலரின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும் வைத்தல்.

**தனி அலுவலர்**
**சோளிங்கர் பேரூராட்சி மற்றும்**
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்**
**வேலூர் மண்டலம்**